அதனை தொடர்ந்து சாதாரண கல் மற்றும் கிராவல்குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர் திரு.M.ஷேக் நவாஸ் ஜியோஎக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ் சேலம் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்து அனைவரையும் வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல்குவாரி திட்ட செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்க காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் தற்போது காணொளி விளக்ககாட்சி மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்ட இந்த சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துக்களை பதிவு செய்யலாம் எனவும் அவை வீடியோவிலும் பதிவு செய்யப்படும் எனவும் கூறினார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை பதிவு செய்தனர் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

<u>1. திரு.சந்திரசேகர், பனப்பட்டி:</u>

வணக்கம் என் பெயர் சந்திரசேகர். பனப்பட்டியிலிருந்து வருகிறேன். கடந்த 15 வருடங்களாக இந்த குவாரி தொழிலை நம்பித்தான் என்னுடைய வாழ்வாதாரம் இருக்கிறது. என்னுடன் ஒரு ஐம்பது குடும்பங்கள் இந்த தொழிலை நம்பித்தான் இருக்கிறோம். எங்களுடைய வாழ்வாதாரம் மேம்படுவதற்கு இந்த குவாரிக்கு முறையான அனுமதி கொடுத்து எங்களுக்கு உதவி செய்யுமாறு தாழ்ந்த பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். நன்றி.

2. திரு.விஜயகுமார், பெரியகுயிலி :

என்பெயர் விஜயகுமார். பெரியகுயிலியிலிருந்து வருகிறேன். இவருக்கு லைசென்ஸ் கொடுத்தால் பல குடும்பங்கள் வாழும் நிறைய பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். நன்றி.

3. திரு.கருப்புசாமி, பெரியகுயிலி :

என் பெயர் கருப்புசாமி. பெரியகுயிலியிலிருந்து வருகிறேன். இவருக்கு லைசென்ஸ் கொடுத்தால் பல குடும்பங்கள் வாழும் அதனால் லைசென்ஸ் கொடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் .

4. திரு.செந்தில்குமார், பெரியகுயிலி :

என் பெயர் செந்தில் குமார். இனிய காலைப் பொழுதில் இங்கு கூடியிருக்கும் அனைவருக்கும் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஊர் தொன்று தொட்டு பெரிய மலை இல்லை . பெரிய தொழிற்சாலைகள் ஒன்றும் கிடையாது. இந்த ஊர் கல்குழி மற்றும் கிரஷர் இவற்றை சார்ந்து தான் எல்லோருமே நல்ல விதமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அதனாலே, எவ்வளவு சீக்கிரம் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு அனுமதி கொடுத்து எல்லோருடைய வாழ்வாதாரமும் மேம்படுவதற்கு உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

5. திரு.கார்த்திக், பெரியகுயிலி :

காலை வணக்கம். என்பெயர் கார்த்திக். பெரியகுயிலியிலிருந்து வருகிறேன். இந்த குவாரி அமைப்பதினால் சுற்றுப்புறத்திற்கு எந்த இடையூறும் கிடையாது. அதே சமயம் நிறைய குடும்பங்களுக்கும், ஊருக்கும் நல்லதுதான் நடக்கப் போகிறது. எனவே இதற்கு

அனுமதி எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொடுக்கும்படி வேண்டி கேட்டுக் கொள்கிறேன். நன்றி.

6. **திரு. சதீஸ்குமார், செட்டிபாளையம்**

வணக்கம். என் பெயர் சதீஷ்குமார். செட்டிபாளையத்தில் தான் வசித்துக் கொண்டு வருகிறேன். நமக்கு கட்டுமானத்திற்கு தேவையான பொருட்களெல்லாம் இங்கு கிடைப்பது குறைவாக இருக்கிறது. கல் குவாரிகள் குறைவாக இருப்பதினால் கட்டுமானத்திற்கு தேவையான பொருட்களெல்லாம் வெளியில் இருந்து வாங்கவேண்டியதாக உள்ளது. அதனுடைய பாதிப்புகள் மக்களுக்குத்தான் வருகிறது. அதனால் கல்குவாரிக்கெல்லாம் சீக்கிரமாக லைசென்ஸ் கொடுத்தால் அனைவருக்கும் நன்று.

7. **திரு.தங்கவேல், பெரியகுயிலி :**

வணக்கம். என் பெயர் தங்கவேல். நான் பக்கத்து தோட்டம். இந்த கல் குவாரிக்கு அனுமதி கொடுப்பதில் எந்த விதமான எதிர்ப்பும் இல்லை. இதனாலே பத்து பேர் பிழைப்பார்கள்.

8. **திரு. வேல்முருகன், பெரியகுயிலி :**

வணக்கம். என் பெயர் வேல்முருகன். இப்போது லைசென்ஸ் கொடுக்கப் போகிற குவாரிக்கு பக்கத்து தோட்டம். இவருக்கு லைசென்ஸ் கொடுப்பதினாலே நாங்களும் பயனடைவோம். அதனாலே எந்த ஒரு எதிர்ப்பும் இல்லை. தாராளமாக லைசென்ஸ் கொடுக்கலாம். நன்றி.

9. <u>திரு. சண்முகம் :</u>

வணக்கம். என் பெயர் சண்முகம். பக்கத்து தோட்டம். லைசென்ஸ் கொடுப்பதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.

10. <u>திருமதி. மஹேஸ்வரி, பெரியகுயிலி :</u>

வணக்கம். இந்த குவாரிக்கு பக்கத்து தோட்டம். இந்த குவாரிக்கு லைசென்ஸ் கொடுப்பதில் எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.

11. <u>திரு. K S திருஞானசம்பந்தம், தலைமை ஒருங்கிணைப்பாளர், தமிழக நொய்யல் விவசாயிகள் சங்கம் :</u>

மரியாதைக்குரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், மாவட்ட வருவாய் அலுவலர் உள்ளிட்ட இங்கே வருகை தந்துள்ள பொது மக்கள் மற்றும் விவசாயிகள் அனைவருக்கும் தமிழக நொய்யல் விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் சார்பில் முதற்கண் வணக்கத்தை உரித்தாக்கிக் கொள்கிறேன். இன்று நடைபெறும் கருத்துக் கேட்பு கூட்டம் கனிம வளத்துறையினுடைய சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடத்தப்பட வேண்டும், இருக்க வேண்டும். பொது சுகாதாரம், சுற்றுச்சூழல், இயற்கை மற்றும் இங்கே இருக்கக் கூடிய ஊர் பொது மக்களுடைய வாழ்வாதார அடிப்படை பாதிக்கப்படக்கூடாது, வாழ்வியல் சூழ்நிலையில் இருக்கின்ற அனைத்து உயிரினங்களுக்கும் எந்த விதமான பாதிப்பும் இருக்கக்கூடாது. அதுமட்டுமன்றி நீர்நிலைகள் மற்றும் வீடுகள், பள்ளிகள் இருக்கிறதா என பார்க்க வேண்டும். SEIAA விதி முறைகளுக்கு உட்பட்டு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். கனிம வளத்துறையினுடைய சட்டத்திற்கு புறம்பாக இந்த திட்டம் இருக்கிறதா என்பதை பார்க்க வேண்டும். பரிணாம வளர்ச்சியில் அனைத்தும் தேவைதான், ஆனால் அதே சமயத்தில் இயற்கை சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படவில்லை என்றால் இன்று

கேரளாவில் நடைபெற்றதை போன்று ஒரு பெரிய அசம்பாவிதங்கள் நடைபெறுவதற்குண்டான சூழ்நிலைகள் இன்று இந்தியாவில் 36 வது இடத்தில் தமிழ்நாட்டில் அதுவும் 6வது இடத்தில் கோவையை மையமாக குறிப்பிட்டுள்ளார்கள். ஏனென்றால் இன்று நம்முடைய கோவை மாவட்டத்தினுடைய நொய்யல் நதி மிகப் பெரிய அளவில் பாதிக்கப் பட்டு பெரிய அளவில் இயற்கை சுற்றுசூழல் பாதிக்கப்பட்டு மக்கள் கேன்சர் எல்லாம் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதே சூழ் நிலையில் இந்த கனிம வளத்துறையினுடைய சட்ட விதிகளுக்கு மாறாக நடக்கின்ற பொழுது பொது மக்களுக்கும் கேன்சர் , நுரையீரல், பெண்கள் மார்பக புற்றுநோயெல்லாம் வந்து பாதிக்கப்பட்டு உள்ளார்கள். இதையெல்லாம் பார்க்க வேண்டும். இந்த திட்டத்தில் இந்த படத்தில் 300 மீட்டரில் வீடெல்லாம் இருக்கிறது. இதை மரியாதைக்குரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களும் , மரியாதைக்குரிய வருவாய் அலுவலர் அவர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும். எதுவாக இருந்தாலும் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடத்தப் பட வேண்டும். அதுதான் சரியாக இருக்கும். தொழிலில் பரிணாம வளர்ச்சி கண்டிப்பாக எல்லோருக்கும் தேவைதான் அதில் மாற்று கருத்து இல்லை. அனைத்து தொழிலும் நடைபெறவேண்டும். அதிலும் மாற்று கருத்து இல்லை. இருந்தாலும் இங்கே கனிம வளங்கள் வெட்டப்பட்டு கேரளாவிற்கு கடத்தப்படுகிறது. அவற்றினால் நம்முடைய தமிழகத்தின் வாழ்வாதாரம், இயற்கை வளங்கள் கொள்ளை அடிக்கப் படுகிறது. இதையெல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இன்று M சாண்ட் , P சாண்டெல்லாம் வந்து மிகப் பெரிய அளவில் தவறான முறையில் பயன்படுத்தப்படுவதால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. எனவே மரியாதைக்குரிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்தினுடைய பல்வேறு சிரமங்களுக்கிடையே தன்னை அர்பணித்து தமிழக மக்களுடைய சுற்று சூழலை பாதுகாக்க வேண்டி, இயற்கையை பாதுகாக்க வேண்டுமென்று தொலை நோக்கு சிந்தனையோடு பணியாற்றிவரும் முகிலன் அவர்கள் சொல்லக் கூடிய கருத்துக்களை

அனைத்தும் ஏற்புடையதாக ஏற்று பதிவு செய்து ஆவணப்படுத்தப் படவேண்டும் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

12. திரு. முகிலன் :

கோவை மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கோவை தெற்கும் இணைந்து நடத்துகின்ற பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தினுடைய தலைவர், மரியாதைக்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், முன்னிலை வகித்து நடத்திக் கொண்டுள்ள மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், மற்றும் இங்கே கலந்து கொண்டுள்ள பல்வேறு உழவர் அமைப்புகள், சுற்றுச்சூழல் அமைப்புகள், சமூக அக்கறை உள்ளவர்களுக்கும் ,இங்கே வருகை தந்துள்ள கல் குவாரி உரிமையாளர்கள், உரிமையாளர்களால் அழைத்து வரப்பட்டவர்கள், பொதுமக்கள் உட்பட அனைவருக்கும் நாங்கள் சார்ந்து இருக்கக் கூடிய தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்தினுடைய சார்பாக எங்களுடைய வணக்கங்களையும் , வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், பச்சாபாளையம் கிராமத்தில் க.ச எண் : 334/1D, 334/2A –ல் அமைய இருக்கக் கூடிய பச்சாபாளையம் கிராமத்தில் 1.64 ஹெக்டர் கிட்டத்தட்ட 4 ஏக்கர் பரப்பளவில் அமைய இருக்கக் கூடிய சக்திவேல் கல்குவாரி. இந்த கல் குவாரி புதிய கல் குவாரி. இந்த குவாரி அமைகின்ற இடத்திற்கு 300மீட்டர் சுற்றளவுக்கு வீடுகள் ஏதும் இல்லை என்று மரியாதைக்குரிய கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் சான்றை கொடுத்து உள்ளார்கள். இவர்களுடைய சுரங்க திட்டத்திலும் அவ்வாறே குறிப்பிட்டு இருக்கிறார்கள். 440மீட்டர் தள்ளிதான் பச்சாபாளையம் ஊர் இருக்கிறது என்று. எந்த வீடுகளும் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். நாங்கள் அவர்கள் கொடுத்த ஆவணங்களையே பார்த்தோம், தமிழ் சுருக்க அறிக்கையினுடைய பக்கம் 10ல் 300மீ, 500மீ சுற்றளவு என்று கொடுத்து உள்ளார்கள்.

அந்த 300மீ சுற்றளவிற்குள்ளே பார்த்தாலே வீடுகள் இருப்பது தெளிவாக தெரியும். அது மட்டுமல்ல இவர்கள் கொடுத்து இருக்கக் கூடிய PPT யிலும் வீடு இருப்பது தெளிவாக தெரிகிறது. 300மீ சுற்றளவிர்க்குள் வீடுகள் இருப்பதை இல்லை என்று மறைத்து இவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நேரில் போய் பார்த்தால் அந்த வீடு இல்லையென்று பலரும் சொல்லலாம் . இங்கு பல வீடுகள் அரசினுடைய ஆவணங்களில் காட்டப்பட்டிருப்பதெல்லாம் ஏற்கனவே UDR என்று சொல்லக் கூடிய 1979 லிருந்து 85 காலத்தில் போடப்பட்ட படங்கள்தான். அதற்கும் நாங்கள் தகவல் உரிமை சட்டத்தில் நில அளவை துறையிடம் கேட்டு வாங்கி உள்ளோம். அதில் என்ன அதில் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால் UDR மற்றும், நத்தம் நில அளவில் புல வரைபட பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள வீடு சிதிலமடைந்தோ, அல்லது இடிந்திருந்தாலோ அது ஆரம்ப நிலையில் எவ்வாறு குறிப்பிடப்பட்டு இருந்ததோ அவ்வாறே பதியப்பட வேண்டும் என்றும் கல் குவாரி தொடர்பான தூர அளவீடு வரைபட அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட வீடு, வீட்டு மனை, ஓடை, பாதை ஆகியவற்றை கிராம வரைபடம், புலவரைபடம் மற்றும் அ – பதிவேடு ஆகியவற்றை சரிபார்த்த வழங்கவேண்டும் என்று சொல்லி தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே 300மீ தூரத்திற்குள் வீடுகள் இருப்பதால் இந்த குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது என்பதுதான் உண்மை. அதுமட்டுமல்ல தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப் பட்டு பொறுப்பீற்றுள்ள கிராம நிவாக அலுவலர் அவர்கள் தவறான முறையில் ஒரு ஆவணத்தை கொடுத்து இருக்கிறார்கள். அது சட்டப் படி தவறு. எனவே இதற்கான சான்றை கொடுத்த கிராம நிர்வாக அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். கடந்த காலங்கள் போல் இன்று கிடையாது. கடந்த காலங்களில் என்ன வேண்டுமானாலும் இருக்கும். யாரும் கண்டுகொள்ளமாட்டார்கள். ஆனால் தொடர்ச்சியாக கடந்த பத்து ஆண்டுகளாக பல உயிர்களை கொடுத்து நாங்கள்

அரசு சட்டப்படி இதுபோன்ற குவாரிகளை செயல்படுத்த வேண்டும் என்று கோரி தொடர்ச்சியான மக்கள் போராட்டங்களையும் , பல்வேறுவிதமான சட்ட போராட்ட்டங்களையும் நடத்திக் கொண்டு வருகிறோம். சமீபத்தில் கூட பல்லடம் தாலுக்காவில் கோடங்கிபாளையம் ராமகிருஷ்ணன் குவாரிக்கும், இதே கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி கோட்டத்திற்குட்பட்ட புரவிபாளையம் கிராமத்திலேயும், செந்தாமரை கல்குவாரியிலும் நடந்த உத்தரவுகளையெல்லாம், நீதி மன்ற தீர்ப்புகளையெல்லாம் கடந்த மாதம் நீங்கள் பார்த்து இருப்பீர்கள். அதில் எல்லாமே சட்டப் படி செயல்படுங்கள் என்று சொல்லித்தான் அனைத்து அதிகாரிகளுக்கும் திரும்ப திரும்ப சொல்கிறார்கள். சட்டப் படி செயல்படாத அதிகாரிகள் மீதும் கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீதி மன்றமே சொல்கிறது. இதை நான் தொடர்ந்து வலியுறுத்துகிறேன். எந்த அதிகாரி மீதோ, குவாரி மீதோ எங்களுக்கு காழ்ப்பு கிடையாது. தொழில் செய்வது அவர்களது உரிமை. சட்டப்படி செயல்படுங்கள் என்றுதான் சொல்கிறோம். அரசு விதிப்படி criteria base ல இருக்க வேண்டும் என்று தான் சொல்கிறோம். இது அப்படி இல்லாமல் இருப்பதையும் மாவட்ட நிர்வாகம் அவர்களுடைய கவனத்திற்கும், மாசுக் கட்டுப்பாட்டு வாரிய பொறியாளர் SEIAA வினுடைய பிரதிநிதியாக இருக்கிறார்கள். அவர்களுடைய கவனத்திற்கும் நாங்கள் கொண்டுவருகிறோம். அதுமட்டுமல்ல, இந்த வீடுகள் இருப்பதை பொறுத்த வரைக்கும் அரசினுடைய ஆவணங்கள் மட்டுமல்ல தற்காலிக தொழிலாளர் குடியிருப்பு 300மீ சுற்றளவிக்குள் இருக்கக் கூடாதென்று அரசின் விதி கூறுகிறது. காரணம் ஒரு குவாரியில் சட்ட விரோதமாக வெடி வைக்கும் பொழுது பாதிப்பு ஏற்பட்டால் அது குவாரிக்குள் இருப்பவர்களை மட்டுமல்ல சுற்றி இருப்பவர்களையும் பாதிக்கும். ஏற்கனவே கடந்த ஆண்டு மே 1ம் தேதியன்று விருதுநகர் மாவட்டம் ஆதியூரில் நடந்த வெடி சம்பவத்தில் சுற்றி 2 கிலோமீட்டர் தூரத்திற்கு வீடுகள் பாதிக்கப்பட்டது. ஆறிற்கும் மேற்பட்டோர்

இறந்தார்கள். நமக்கு அருகாமையில் கோடாங்கிபாளையத்தில் விஜயலக்ஷ்மி குவாரியில் வெடி சம்பவம் நடந்து 3 கிலோமீட்டர் தள்ளி இருக்கக் கூடிய சூலூர் ஏர் போர்ஸ் வரைக்கும் பாதிப்பு ஏற்பட்டது அனைவருக்கும் தெரியும். எனவே அரசு தெளிவாக என்ன சொல்கிறது என்றால் 300 மீட்டர் சுற்றளவிற்குள் தொழிலாளர்களுடைய தற்காலிக, நிரந்தர குடியிருப்புகள் இருக்கக் கூடாது என்று தெளிவாக சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இந்த குவாரியை சுற்றி 300 மீட்டர் சுற்றளவிற்குள் தற்காலிக, நிரந்தர தொழிலாளர் குடியிருப்புகள் இருப்பது எல்லா ஆவணங்களிலும் தெரிகிறது. KML ல் நீங்கள் பார்த்தாலும் தெரியும். எனவே இந்த குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது. இந்த குவாரியை சுற்றி கூகுள் படங்களில் பார்த்த போது குவாரியினுடைய தென் மேற்கு பகுதியில் 214 மீட்டரில் வீடு இருக்கிறது. குவாரியினுடைய வடமேற்கு பகுதியில் 291 மீட்டரில் பல வீடுகள் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் குவாரியினுடைய வடகிழக்கு பகுதியில் பார்த்தால் 270மீட்டரில் குடியிருப்புகள் இருக்கிறது காட்டப்பட்டிருக்கிறது. குவாரியினுடைய வடமேற்கு பகுதியில் 208 மீட்டரில் குடியிருப்புகள் இருப்பது காட்டப்பட்டிருக்கிறது. அப்போது தற்காலிக, நிரந்தர தொழிலாளர் குடியிருப்பு இருக்கக் கூடாது, 300 மீட்டரில் வீடுகள் இருக்கக் கூடாது எனும் போது இத்தனையும் கூகுளில் பல வீடுகள் . கூகுள் வரைபடத்தில் காட்டப்பட்டிருக்கிறது ஏற்கத்தக்கது. நீதி மன்றமே ஏற்றுக் கொள்கிறது. இவர்கள் கூட PPT ல் வைத்திருப்பதெல்லாம், அது மட்டுமல்லாமல் EIA அறிக்கையில் வைத்திருப்பதெல்லாம் கூகுள் வரைபடம்தான். எனவே இது அரசினுடைய அட்ச ரேகை, தீர்க்க ரேகை அடிப்படையில் ஆதாரபூர்வமாக இருக்கக் கூடிய விஷயம். எனவே சக்திவேல் கல் குவாரியை சுற்றி 300 மீட்டர் சுற்றளவிற்குள் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் தற்காலிக, நிரந்தர தொழிலாளர் குடியிருப்பு கூகுள் படங்கள் போன்றவையெல்லாம் இருப்பதினாலே இந்த குவாரிக்கு சட்டப் படி அனுமதி கொடுக்க முடியாது, கொடுக்ககே

கூடாது என்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். அடுத்ததாக நாங்கள் திரும்ப திரும்ப மாவட்ட நிர்வாகத்திற்கும், மாசுக்கட்டுப்பாட்டு வாரிய பொறியாளர் அவர்களுக்கும் நாங்கள் சொல்லிக் கொள்வது இந்த கருத்து கேட்பு கூட்டத்திற்கான ஆவணங்கள் 45 வகையான ஆவணங்கள் இருக்க வேண்டும். ஏனென்றால் இதில் வனத்துறை, தொல்லியல் துறை, குடிநீர் வடிகால், இப்படி எல்லா துறையினுடைய NOC வாங்கி வைத்திருக்க வேண்டும். ஆனால் பதிவேற்றம் செய்யும் போது அதையெல்லாம் முழுதும் பதிவேற்றம் செய்வதில்லை. ஏற்கனவே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2021–ல் அரசம்பாளையம் பரமசிவம், பச்சாபாளையம் மணிகண்டன் குவாரிகளுக்கு அனைத்து ஆவணங்களும் இருந்தது. தற்போது, அறிந்து கொள்ளக் கூடாதென்பதற்காகவே பல ஆவணங்கள் வைக்கப்படுவதில்லை. குறிப்பாக, கிராம வரைபடம் கூட வைக்கவில்லை, டோபோ ஸ்கெட்ச் வைத்திருக்கிறார்கள். இதை தொடர்ச்சியாக நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால் கிராம வரை படம் வைக்கும் பொழுது அதில் எல்லா சுட்டிகளும் இருக்கும். அதில் வீடுகளும், வண்டிப்பாதைகள் காட்டப்பட்டிருக்கும், ஓடைகள் இருக்கிறது, நடை பாதைகள் இருக்கிறது, கிணறுகள் வரை அனைத்துமே அதில் சுட்டிகளாக காட்டப் பட்டிருக்கும். டோபோ ஸ்கெட்ச்சில் தூரம் மட்டும் தான் காட்டப்பட்டிருக்கும், வேறு எந்த விதமான சுட்டிகளும் இருக்காது. கிராம வரைபடம் எல்லோரிடமும் இருக்கிறது, எங்களிடமும் இருக்கிறது. வேறு குவாரிக்கு கொடுத்ததில் இருக்கிறது. அப்போது இதை ஏன் வைக்க மறுக்கிறார்கள். திட்ட வடிவமைப்பாளர்கள் தொடர்ந்து இது போன்ற தவறுகளை, ஜியோ எஸ்ப்ளோரஷன் அண்ட் மைனிங் சொல்லுஷன் நிறுவனம் தான் இதை வைத்திருக்கிறது. பச்சாபாளையத்தில் இருக்கும் பெரும்பாலான கல்குவாரிகளுக்கு அவர்கள் தான் திட்டம் தயாரித்துக் கொடுக்கிறார்கள். கிராம வரைபடம் இல்லாத காரணத்தால், கருத்து கேட்பு கூட்டமே நிறுத்தி வைக்கப் பட்ட வரலாறெல்லாம் அவர்களுக்கு தெரியும். பல ஊர்களில் அப்படி நடந்திருக்கிறது. இங்கே

எதிர்ப்பு இல்லாததினால் யாரும் பேசவில்லையே தவிர கிராம வரைபடம் என்பது அடிப்படை. VAO சான்றிதழ் கொடுப்பது கூட TOPO தான் கொடுத்திருக்கிறார்கள். எதற்காக இப்படி கொடுக்கிறார்கள்? கிராம வரைபடம் தான் கொடுக்க வேண்டும். தயவு செய்து மாவட்ட வருவாய் அலுவலர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி இதை ஒரு சுற்றறிக்கையாக போடுங்கள். இதுதான் சட்டம், எல்லோருமே சட்டத்தை மீறுகிறார்கள். இது வழக்கிற்கு போனால் இந்த கிராம நிர்வாக அலுவலரின் பணி கூட பாதிக்கும். பச்சாபாளையத்திற்கு கிராம வரைபடம் உள்ளது. ஏன் காட்ட மறுக்கிறார்கள்? காட்டினால் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் இணைய தளத்தில் போட்டுவிடும். அப்போது எல்லோரும் பார்த்துக் கொள்வார்கள். எல்லா உண்மைகளும் தெரிந்து விடும். உண்மைகளை தெரியக் கூடாதென்று ஆவணங்களை கொடுத்துவிட்டு கருத்து கேட்பு கூட்டத்தை நடத்தினால் எப்படி உண்மையை சொல்ல முடியும்?. எனவே, இது போன்ற தவறுகள், இது போன்ற குறைபாடுகள் எதிர்காலத்தில் இல்லாமல் இருக்க வேண்டும். 45 வகையான ஆவணங்களையும் இணையத்தில் பதிவேற்றம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். 45 வகை ஆவணங்கள் SEIAA மற்றும் சுரங்கத்துறையில் உள்ளது. ஆனால் அறிக்கை வருவதில்லை. அடுத்ததாக, இந்த குவாரிக்கு 440 மீட்டர் தூரத்தில் பச்சாபாளையம் ஊர் இருக்கிறது என்று சொல்லி இவர்களே EIA அறிக்கையில் சொல்லி இருக்கிறார்கள். சிறுகனிம சலுகை விதிகள் 1959 பிரிவு 36 ல் தெளிவாக சொல்லி இருக்கிறார்கள் "உள்ளாட்சி அமைப்புகள், மற்றும் மத்திய மாநில அரசு நிறுவனங்கள் அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் போன்ற முகமை நிறுவனங்களுடைய நீரேற்று நிலையங்கள், நீர் வழங்கும் ஏற்பாடு 500மீ சுற்றளவிற்குள் இருந்தால் அந்த குவாரிக்கு அனுமதி கொடுக்கக் கூடாது" என்கிறார்கள். காரணம் என்னவென்றால் வெடி வைக்கும் போது போர் போடப்பட்டிருந்தால் அவை பாதிக்கும் மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி விரிசல் அடைய வாய்ப்பு உள்ளது என்பதால் தான் இந்த விதியை

வைத்திருக்கிறார்கள். ஆனால் குவாரியிலிருந்து 440 மீட்டர் என்று திட்ட வடிவமைப்பாளரும், குவாரி உரிமையாளரும் அவர்களுடைய அறிக்கையில் 500m எதுவுமே இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். 440மீட்டர் தூரத்தில் ஊர் இருக்கும் பொழுது போர்வெல், மேல் நிலை நீர் தேக்க தொட்டி இருப்பதை மறைத்து தான் திட்ட அறிக்கையும், சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையும் சமர்ப்பித்துள்ளார். எனவே, பொய்யான ஆவணங்களை உருவாக்கி, உண்மையை மறைத்து இவர்கள் அறிக்கை கொடுத்திருப்பதால் இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்கக் கூடாது, அதே போல இந்த குவாரிக்கான ஆய்வு காலத்தில் மரியாதைக்குரிய மாநில சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு குழுமம் 11.01.2025 அன்று தான் காற்று, நீர், மண், ஒலி பல்லுயிர் சூழல், சமூக பொருளாதார சூழலை ஆய்வு செய்ய அனுமதி கொடுத்துள்ளார்கள். அடிப்படை கண்காணிப்பு காலம் டிசம்பர் 1, 2024 முதல் பிப்ரவரி 28, 2025 வரை, கிட்டத்தட்ட 40 நாட்களுக்கு முன்பே ஆய்வுகளை தொடங்கி இருக்கிறார்கள். இது எப்படி சரியாக இருக்கும்? இது சட்ட விதி மீறல் எனவே இப்படியான வகையில் தான் இவர்களுடைய அறிக்கை இருக்கிறது. அதுமட்டுமல்ல இந்த குவாரியை பொறுத்தவரை, குவாரிக்கு இருபுறமும் செல்லக் கூடிய சாலைகள், குவாரியில் வடகிழக்கு பகுதி வழியாகத்தான் செல்வோம் என்று ரோடு மேப் EIA சுருக்க அறிக்கை 9ல் காட்டி உள்ளார்கள். அது கிழக்கு மற்றும் மேற்கு புறத்தில் கிராம சாலை. கிராமபுறச்சாலைகளில் 10 டன் எடையோடு மட்டும் தான் வாகனங்கள் செல்ல வேண்டுமென்று அரசு சொல்லி இருக்கிறது. சாலைகளில் வாகனங்கள் கொண்டு செல்லும் எடை அளவு பற்றி மோட்டார் வாகன சட்டம் சொல்லி இருக்கிறது. இது தொடர்பாக உச்ச நீதி மன்றம் ரிட் பெட்டிசன் 136 /2003ல் போடப்பட்டதில் 2005-ல் தீர்ப்பு சொல்லி இருக்கிறார்கள். தமிழ்நாடு போக்குவரத்து ஆணையர் கிராம சாலையில் அதிக எடையுடன் செல்லும் வாகனங்கள் மீது மோட்டார் வாகன சட்டம் 1988 படி செக்சன் 113, 113 /3, 114 , 194 படி நடவடிக்கை

எடுக்க வேண்டும் என அனைத்து துறைக்கும் எழுதி உள்ளார். 1 டன் அதிகமாக ஏற்றி சென்றாலும் அதற்கு அபராதமாக 20000 ரூபாயும் கூடுதலாக ஒவ்வொரு டண்ணுக்கும் 2000 அபராதம் போடவேண்டும் என்று அறிக்கையில் சொல்லி இருக்கிறது. Prevention of Damage of Public Property Act, 1984 பொது சொத்துக்கு சேதாரம் வழக்கும் போடப்பட்டுள்ளது. EIA அறிக்கையில் செயல்பாட்டு அறிக்கையில் பக்கம் 7-ல் தினசரி 6 லோடு கொண்டு போவதாக சொல்லி இருக்கிறார்கள். ஒருநாள் உற்பத்தி 72 கன மீட்டர் 6 லாரிகளில் 12 கனமீட்டர் வீதம் கொண்டு போவதாக சொல்லி உள்ளார்கள். 1 கனமீட்டர் என்பது $2^{3/4}$ டன். அப்படியானால் 12 கனமீட்டர் என்பது 33 டன். கிராமசாலைகளில் 10 டன் மட்டுமே கொண்டு போக வேண்டும், அப்போது 8 வருடங்கள் இருக்க வேண்டிய சாலை 3 மாதத்தில் உடைந்து போகிறது. மாவட்ட வருவாய் அலுவலர் வந்துள்ளீர்கள். மாவட்ட வருவாயை பாதுகாப்பது உங்கள் கடமை மற்றும் பொறுப்பு. 33 டன் 10 மற்றும் 12 சக்கர வாகனங்களில் போனால் எப்படி இந்த சாலை பாதுகாக்கப்படும்? தீர்ப்பை மதிக்காத காரணத்தினால் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவராக இருந்த அன்சுல் மிஸ்ரா என்பவருக்கு 3 மாதம் சிறைத்தண்டனை உச்ச நீதிமன்றம் விதித்துள்ளது. அதே போல கோவை மாவட்டத்தில் கமிசனர் மற்றும் 4 தாசில்தார் மீது சிறை தண்டனையும் விதித்து உத்தரவிட்டிருக்கிறது. குவாரி உரிமையாளரின் அறிக்கை விதியை மீறி இருக்கிறது. இதன் மீது நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். இந்த குவாரி உரிமையாளர் புதியவர் அல்ல இவர் ஏற்கனவே குவாரி நடத்திக் கொண்டிருப்பவர்தான். குவாரிகள் ஒரு ஏக்கருக்கு பசுமை அரண் 200 மரங்கள் வீதம் அமைக்கவேண்டும் என்று சட்டத்தில் கூறப்பட்டு உள்ளது ஆனால் இவர் நடத்தும் 2.28.5ஹெக்டர் பரப்பளவில் 2018 முதல் 2023 வரை குவாரி நடத்தி இருக்கிறார் புல எண்கள் 334/2பி, 3பி, 4எ, 4பி ல் . ஆனால் அங்கே எந்த மரங்களும் கிடையாது. பசுமை அரண் இல்லை. பசுமை அரண் என்பது காற்று மாசுபாட்டை குறைப்பதற்காக, ஆனால்

அங்கே இல்லை. இன்று காற்று மாசுபாட்டால் டைப் 2 சுகர் ஏற்பட்டு இன்று CBSE பள்ளியில் படிக்கும் எல்லா குழந்தைக்கும் சர்க்கரை நோய் இருக்கிறதா என்று சோதனை பண்ண சொல்லி அறிக்கை கொடுத்து உள்ளார்கள். காற்று மாசுபாட்டை தடுப்பதற்கு பசுமை அரண் மிக முக்கியமானது. ஆனால் மரங்கள் நடப்படவில்லை. ஏற்கனவே கோவை மாவட்ட ஆட்சியர் ராமகிருஷ்ணன் குவாரிக்கு பசுமை அரண் இல்லை என்பதற்காக அனுமதியை ரத்து செய்தார்கள். அந்த மரங்கள் ஆல், அரசு, அத்தி, பூவரசு போன்ற நாட்டு மரங்களாக இருக்க வேண்டும். நடைமுறையில் மரங்களை நடுவதில்லை. அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.அதே போல் பெரும்பாலான குவாரிகளில் கம்பி வேலி இல்லாமல் இருக்கிறது. அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் முன் வைத்துக்கொள்கிறோம் மற்றும் வெடியை பொறுத்தவரை NONEL என்று சொல்லக் கூடிய NONEL வெடிகளைத்தான் வெடிக்க வேண்டும். அப்படி வெடிக்காமல் சட்ட விரோதமான வெடிகளை வெடிப்பதும், மதிய உணவு இடைவேளை நேரமான 1–2 மணிக்குள் வைக்கவேண்டும். நானல் வெடியை மட்புள் (Mudful) முறையில் வெடிக்கவேண்டும். வெடியின் மேல் ஈரமணல் மூட்டை, சாக்கு அல்லது தார்பாய் போட்டு, லாரி டையரினை போட்டு அதிர்வு இல்லாமல், Zig–Zag முறையில் குழு போட்டு, ஒரு வெடிக்கும் மற்றொரு வெடிக்கும் 28 விநாடிகள் இடைவெளி விட்டு வெடிக்க வேண்டும். இதையெல்லாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு சக்திவேல் அவர்களுடைய குவாரி 300 மீட்டர் சசுற்றளவிற்குள் வீடுகள் இருக்கிறது, தற்காலிக நிரந்தர குடியிருப்புகள் இருக்கிறது, 500மீ சுற்றளவிற்குள் போர் வெல் மற்றும் மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் இருக்கிறது, அதுமட்டுமல்லாமல் குவாரி சுற்றி கிழக்கும் மேற்கும் கிராமபுர சாலைகள் செல்கிறது. எனவே இந்த குவாரிக்கு அனுமதி தரக்கூடாது, அதுமட்டுமில்லாமல் இந்த குவாரி உரிமையாளர் தனது சத்திய பிராமண வாக்குமூலத்தில் நான் சொல்லக் கூடிய அனைத்து விபரங்களும் உண்மை என்று தெரிவிக்கிறேன்.

இதில் ஏதாவது ஒன்று மறைக்கப்பட்டிருந்ததாலோ அல்லது தவறாக குறிப்பிட்டிருந்தாலோ தனக்கு அனுமதி தரப்பட மாட்டாது என்பதை நான் நன்கு அறிவேன் என்றும் அவ்வாறு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தாலும் அதை நான் என்னுடைய சொந்த பொறுப்பிலும், செலவிலும் அப்புறப் படுத்திக்க கொள்வேன் என்று சொல்லி இருக்கிறார். எனவே அதன் அடிப்படையில் இந்த புல என் 334/1D க்கும் 334/2A க்கும் சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது என்பதையம் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே சூலூர் பகுதியை பொறுத்தவரை அதிலும் குறிப்பாக இந்த பச்சாபாளையம் கிராமம் அமைந்துள்ள பகுதி என்பது முழுக்க முழுக்க over exploit என்று சொல்லக் கூடிய தண்ணீர் அதிகமாக எடுக்கப்பட்ட பகுதி. இங்கே இவ்வளவு ஆழத்தில் இந்த குவாரி அமையும் பொழுது இங்கே மிகப் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தும் எனவே இந்த குவாரி இங்கே அமைய கூடாது, அமைப்பதற்கு சட்டப்படி தகுதி இல்லை என்பதையும் இதற்கு பொய்யான சான்று கொடுத்த கிராம நிர்வாக அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் சொல்வது எல்லாமே சட்டத்தின் அடிப்படையில் செயல்பட வேண்டும். இங்கே சட்ட விரோதமாக செயல் படக்கூடிய அனைத்து குவாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இயற்கையை பொறுத்த வரை, குவாரிகளில் பெஞ்ச் என்பது மிக முக்கியமானது . அப்படி இல்லாததினால் கடந்த மாதம் சிவகங்கை மாவட்டத்தில் மல்லாக்கோட்டை என்ற கிராமத்தில் குவாரி சரிந்து விழுந்து 6 பேர் இறந்து போனார்கள். பெஞ்ச் முறை இல்லாத குவாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுத்து குவாரிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் உயிரை பாதுகாத்து கொடுங்கள். தொழிலாளர்களுக்கு ESI, PF உள்ளதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அதுமட்டுமல்லாமல், வெடி மருந்துகளை பொருத்த வரை, இங்கு பல குவாரிகளில் அதிகமாக வெட்டி எடுத்ததற்கு அபராதம் போடப்பட்டுள்ளது. அதற்கு அவர்கள் சட்ட விரோதமாக வெடி மருந்தை எங்கிருந்து பெற்றார்கள் என்பதை அரசு

கண்டறிய வேண்டும். வெடிமருந்து சட்ட அடிப்படையில் அவர்கள் மீது வழக்கு தொடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டு இன்று உச்ச நீதி மன்றமும், உயர் நீதி மன்றமும் பல்வேறு நீதிமன்ற நிகழும் அதிகாரிகள் சரியான முறையில் செயல் பட்டால் கூட நான் என்னென்ன விதிமீறல்கள் சக்திவேல் குவாரியில் உள்ளது என்று சொல்லி விட்டேன். அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் . இதை பார்த்துக் கொண்டிருக்கின்ற SEIAA வின் TECHNICAL TEAM எல்லாமே நாங்கள் கொடுத்தது எல்லாமே ஆதார பூர்வமானவை. நீங்கள் அதை மீறி அனுமதியோ அல்லது வேறு ஏதாவது கொடுத்தால் உங்கள் மீதும் சட்டபடியான நடவடிக்கை வரும் என்பதை நாங்கள் தெரிவித்துக் கொண்டு இது போன்று பொய்யான ஆவணங்களை தொடர்ந்து கொடுக்கின்ற ஜியோ எஸ்ப்ளரேஷன் அண்ட் மைனிங் சொல்யூசன் என்ற நிறுவனத்தின் மீது திட்ட வடிவமைப்பாளர் மீது கருப்பு பட்டியலில் சேர்க்க வேண்டும். ஏனென்றால் ஒரு முறை சொன்னால் தவறு, தொடர்ந்து செய்தால் குற்றம். கிட்டத்தட்ட 2001 லிருந்து 300 கூட்டங்களில் சொல்லி இருக்கிறோம். சொல்லியும் அவர்கள் தொடர்ந்து இந்த குற்றத்தை மனசாட்சியற்று எந்த விதமான சமூக அக்கறையுமின்றி செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த நிறுவனத்தை கருப்பு பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கையும் வைத்துக் கொண்டு வாய்ப்புக்கு நன்றிகூறி விடை பெற்றுக் கொள்கிறேன் வணக்கம்.

மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் :

அனைவருக்கும் நன்றி. சக்திவேல் குவாரி சம்மந்தமாக வேறு ஏதேனும் கருத்துக்களை பதிவு செய்வதாக இருந்தால் தற்பொழுது சொல்லலாம். அல்லது இக்கூட்டத்தை இத்தோடு முடித்துக் கொண்டு அடுத்த குவாரி சம்மந்தமாக கருத்து கேட்பு கூட்டம் நடத்தலாம். யாரேனும் சக்திவேல் குவாரி சம்மந்தமாக பேச விரும்புகிறீர்களா?

13. திரு. முரளி , சூலூர்

வணக்கம் என் பெயர் முரளி. நான் சக்திவேல் அண்ணனுடைய குவாரிக்கு பக்கத்தில்தான் நான் இருக்கிறேன். இதுவரைக்கும் அண்ணன் எந்த ஒரு சட்ட விரோத விதி மீறலும் செய்தது கிடையாது. எப்படி இருந்தாலும் சட்டத்தில் இருக்கின்ற அதிகாரிகள் யாருமே அந்த மாதிரி ஒரு விஷயத்திற்கு ஆதரவு தரமாட்டார்கள். இது வரைக்கும் அவர் எந்த வித சட்ட மீறலும் செய்தது இல்லை. அரசும் அதற்கு அனுமதி கொடுத்தது இல்லை. இதுக்கு மேல் அவர் அந்த மாதிரி செய்வாரா என்பது தெரியவில்லை. பொதுமக்களுக்கும் எந்த வித இடையூரும் இல்லாததினால் அவருக்கு நல்ல படியா லைசென்ஸ் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்

14. திரு. சரவண செல்வன், மலுமிச்சம்பட்டி :

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், இங்கு கருத்து சொல்ல வந்திருக்கும் பொது மக்கள் அனைவருக்கும் எனது காலை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய பெயர் சரவண செல்வன். நான் மலுமிச்சம்பட்டியிலிருந்து வருகிறேன். நான் கோவை மாநகராட்சியில் சாலை ஒப்பந்த பணியாளராக பதிவு செய்து சாலை பணிகளை மேற்கொண்டு வருகிறேன். இங்கே கோவை மாவட்டத்தை பொறுத்த வரைக்கும் இங்கே இருக்கிற கிரஷர்களுக்குண்டான கனிமங்கள் கோவை மாவட்டத்தில் இருக்கிற குவாரிகளிலிருந்து போதிய அளவு கிடைப்பதில்லை. அண்டை மாநிலங்களிலிருந்துதான் இந்த கற்கள் வெட்டி எடுத்து கொண்டு வரப்படுகிறது. அதனால் இங்கு கொண்டு வரப்படுகிற கற்களின் விலை அதிகமாக இருக்கும் காரணத்தினால் சாலை ஒப்பந்ததாரர்களுக்கும் அரசுக்கும் போதிய வருமான இழப்பு ஏற்பட்டு கொண்டிருக்கிறது. அதாவது அரசாங்கத்திற்கு வரவேண்டிய மெட்டீரியலுடைய விலை அதிகமாக

இருப்பதால் அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்பட்டு கொண்டிருக்கிறது. அதனால் கோவை மாவட்டத்தில் போதிய அளவிலான குவாரிகளுக்கு அனுமதி தந்து இதை வாழ்வாதாரமாக கொண்டு வாழும் எங்களை போன்றவர்களுக்கும் இங்கு சுற்றுவட்டார பகுதியிலிருக்கும் கிராம மக்களுக்கும் வேலை வாய்ப்பு அளித்து இதற்கு அனுமதி தருமாறு தாழ்மையுடன் வேண்டி கேட்டுக் கொள்கிறோம். இதுமட்டுமன்றி கோவை மாவட்ட கிரஷர், குவாரி உரிமையாளர்கள் மற்றும் சாலை ஒப்பந்தப் பணியாளர்கள் மூலமாக செட்டிபாளையம் டு பல்லடம் சாலையில் 23 ஏக்கர் பரப்பளவுள்ள கோயில் பூமியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் தத்தெடுத்து 5000 மரக்கன்றுகள் நட்டு வளர்க்கும் பணி ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இதற்கு முன்னுதாரணமாக கிரஷர், குவாரி உரிமையாளர்கள் மற்றும் சாலை ஒப்பந்தப் பணியாளர்கள் ஒன்று சேர்ந்து சுமார் 40 லட்சம் செலவீட்டில் 5000 மரக்கன்றுகள் நட்டு வளர்க்கும் பணி நடந்துகொண்டிருக்கிறது. இதன் இரண்டாம் பாகமாக பெரிய குயிலி சுற்றுவட்டார பகுதியில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் சுமார் 3000 மரக்கன்றுகள் நடும் பணி தீர்மானிக்கப் பட்டு அதற்குண்டான இடம் தேர்வு செய்வதற்காக குவாரி மற்றும் கிரஷர் ஓனர் மாநில தலைவர் தலைமையில் இடம் இப்பொழுது பார்த்துக் கொண்டிருக்கிறோம். இரண்டாம் கட்டமாக இது வருடாவருடம் இது போன்று மரக்கன்றுகள் நாடும் பணி ஒவ்வொரு இடங்களிலும் நடக்கும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இதுமட்டுமன்றி இங்கிருக்கும் குவாரிகளிலிருந்து கிரஸெர்களுக்கு தேவையான அளவுக்கு கனிமங்கள் கிடைப்பதில்லை. அண்டை மாநிலங்களிலிருந்து கனிமம் வரும் காரணத்தினால் விலை மிகவும் அதிகரித்து பொது ய மக்களின் வாழ்வாதாரங்களிலும் கட்டிடத்துறையிலும் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது இதனால் இதுபோன்ற குவாரிகளை அனுமதி அளித்து இவர்களின் வாழ்வாதாரங்களை காப்பாற்றுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். நன்றி.

மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் :

சக்திவேல் குவாரி சம்மந்தமாக வேறு எவரேனும் கருத்துக்களை பதிவு செய்ய விருப்பப்பட்டால் தற்போது பதிவு செய்யலாம். அல்லது சக்திவேல் குவாரி சம்மந்தபட்ட கருத்துக் கேட்பு கூட்டத்தை இத்துடன் முடித்துக் கொள்ளலாம். மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல் ஆகியவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

கூட்ட முடிவில் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அவர்கள் பேசும் போது இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தலைமை ஏற்று நடத்தி கொடுத்த மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்த பொது மக்கள் மற்றும் காவல் துறை நண்பர்கள் அனைவருக்கும் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொண்டு இந்த கூட்டத்தை இனிதே முடிக்கப்படுகிறது. நன்றி வணக்கம். எனஅனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

மனுக்களின் எண்ணிக்கை: 1

17/7/25

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**கோயம்புத்தூர் தெற்கு.**

17/7/25

17/7/25

**முதன்மை மண்டல மேலாளர்/**
**மாவட்ட வருவாய் அலுவலர்,**
**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**